



# ஐம்படையை ஏந்திய அருளிச்செயல்கள்

## பெரியாழ்வார் திருமொழி

1.3.5 :
எழிலார் திருமார்வுக்கு* ஏற்கும் இவையென்று*
அழகிய ஐம்படையும்*ஆரமும் கொண்டு**
வழுவில் கொடையான்* வயிச்சிரவணன்*
தொழுது உவனாய் நின்றான் தாலேலோ* தூமணி வண்ணனே! தாலேலோ.

1.5.9 :
பாலொடு நெய்தயிர் ஒண் சந்தொடு சண்பகமும்*
பங்கயம் நல்ல கருப்பூரமும் நாறிவர*
கோல நறும்பவளச் செந்துவர் வாயினிடைக்*
கோமள வெள்ளி முளைப்போல் சில பல்லிலக**
நீல நிறத்தழகார் ஐம்படை யின் நடுவே*
நின் கனி வாயமுதம் இற்று முறிந்து விழ*
ஏலுமறைப் பொருளே ஆடுக செங்கீரை*
ஏழுலகும் உடையாய் ஆடுக ஆடுகவே.

1.5.10 :
செங்கமலக் கழலில் சிற்றிதழ் போல் விரலில்*
சேர்திகழ் ஆழிகளும் கிண்கிணியும்*அரையில்
தங்கிய பொன்வடமும் தாள நன்மாதுளையின்*
பூவொடு பொன்மணியும் மோதிரமும் கிறியும்**
மங்கல ஐம்படை யும் தோள்வளையும் குழையும்*
மகரமும் வாளிகளும் சுட்டியும் ஒத்திலக*
எங்கள் குடிக்கரசே ஆடுக செங்கீரை*
ஏழுலகும் உடையார் ஆடுக ஆடுகவே.

1.8.2 :
செங்கமலப் பூவில்*தேன் உண்ணும் வண்டே போல்*
பங்கிகள் வந்து*உன் பவளவாய் மொய்ப்ப**
**சங்கு வில் வாள் தண்டு*சக்கரம்** ஏந்திய
அங்கைகளாலே வந்து அச்சோவச்சோ*ஆரத்தழுவா வந்து அச்சோவச்சோ.

3.7.3 :
பொங்கு வெண்மணல் கொண்டு*சிற்றிலும் முற்றத்திழைக்கலுறில்*
**சங்கு சக்கரம் தண்டு வாள் வில்லும்** அல்லது இழைக்கலுற்றாள்**
கொங்கை இன்னம் குவிந்தெழுந்தில்*கோவிந்தனோடு இவளை*
சங்கையாகி என்னுள்ளம்*நாள்தொறும் தட்டுளுப்பாகின்றதே.

4.1.2 :
**நாந்தகம் சங்கு தண்டு*நாணொலிச் சார்ங்கம் திருச்சக்கரம்***
ஏந்து பெருமை இராமனை*இருக்குமிடம் நாடுதிரேல்*
தலையால் குரக்கினம் தாங்கிச் சென்று*தடவரை கொண்டடைப்ப**
அலையார் கடற்கரை வீற்றிருந்தானை*அங்குத்தைக் கண்டாருளர்.

4.7.5 :
உழுவதோர் படையும் **உலக்கையும் வில்லும்*ஒண்சுடர் ஆழியும் சங்கும்***
**மழுவொடு வாளும்** படைக்கலம் உடைய*மால் புருடோத்தமன் வாழ்வு**
எழுமையும் கூடி ஈண்டிய பாவம்*இறைப்பொழுதளவினில் எல்லாம்*
கழுவிடும் பெருமைக் கங்கையின் கரை மேல்*கண்டபென்னும் கடிநகரே.

5.2.9 :
உறகல் உறகல் உறகல்***ஒண்சுடர் ஆழியே சங்கே***
**அறவெறி நாந்தக வாளே*அழகிய சார்ங்கமே தண்டே****
இறவு படாமல் இருந்த*எண்மர் உலோகபாலீர்காள்*
பறவையரையா உறகல்*பள்ளியறை குறிக் கொண்மின்.

## பெருமாள் திருமொழி

1.8 :
கோலார்ந்த **நெடும் சார்ங்கம் கூனற் சங்கம்***
**கொலையாழி கொடுந்தண்டு கொற்ற வாள்***
காலார்ந்த கதிக் கருடன் என்னும்* வென்றிக்
கடும் பறவை இவை அனைத்தும் புறம் சூழ் காப்ப**
சேலார்ந்த நெடுங்கழனி சோலை சூழ்ந்த*
திருவரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும்*
மாலோனைக் கண்டு இன்பக் கலவி எய்தி*
வல்வினையோன் என்று கொலோ வாழும் நாளே.

## திருச்சந்த விருத்தம்

24 :
கங்கை நீர் பயந்த பாத* பங்கயத்து எம் அண்ணலே*
அங்கை **ஆழி சங்கு தண்டு*** **வில்லும் வாளும்** ஏந்தினாய்**
சிங்கமாய தேவ தேவ* தேனுலாவு மென்மலர்*
மங்கை மன்னி வாழு மார்ப* ஆழி மேனி மாயனே

28:
படைத்த பார் இடந்தளந்து* அதுண்டுமிழ்ந்து பௌவநீர்*
படைத்தடைத்ததில் கிடந்து* முன் கடைந்த பெற்றியோய்**
மிடைத்தமாலி மாலிமான்* விலங்கு காலனூர் புக*
படைக்கலம் விடுத்த* **பல்படை**த் தடக்கை மாயனே

97:
வெய்ய **ஆழி சங்கு தண்டு*** **வில்லும் வாளும்** ஏந்து சீர்க்
கைய* செய்ய போதில் மாது* சேரும் மார்ப நாதனே**
ஐயிலாய ஆக்கை நோய்* அறுத்து வந்து நின்னடைந்து
உய்வதோர் உபாயம் நீ * எனக்கு நல்க வேண்டும்.

104:
கடுங்கவந்தன் வக்கரன்* கரன் முரன் சிரம்மவை*
இடந்து கூறு செய்த* **பல்படை**த் தடக்கை  மாயனே**
கிடந்திருந்து நின்றியங்கு* போதும் நின்ன பொற்கழல்*
தொடர்ந்து விள்விலாததோர்* தொடர்ச்சி நல்க வேண்டுமே.

106:
கறுத்தெதிர்ந்த கால நேமி* காலனோடு கூட* அன்று
அறுத்த **ஆழி சங்கு தண்டு*** **வில்லும் வாளும்** ஏந்தினாய்**
தொறுக்கலந்த ஊனமஃது* ஒழிக்க அன்று குன்றம் முன்*
பொறுத்த நின் புகழ்க்கலால் ஓர்* நேசமில்லை நெஞ்சமே.

## பெரிய   திருமொழி

2.8.3 :
செம்பொனிலங்கு வலங்கை வாளி***திண் சிலை தண்டொடு சங்கம் ஒள் வாள்***
**உம்பர் இருசுடர் ஆழியோடு*கேடகம்** ஒண்மலர் பற்றி எற்றே!**
வெம்பு சினத்து அடல் வேழம் வீழ* வெண்மருப்பொன்று பறிபுட்* இருண்ட
அம்புதம் போன்று இவரார் கொல்? என்ன* அட்டபுயகரத்தோன் என்றாரே

5.10.5 :
மூள எரி சிந்தி முனி எய்தி அமர் செய்துமென* வந்த அசுரர்*
தோளும் அவர் தாளும் முடியோடு பொடியாக* நொடியாமளவெய்தான்**
**வாளும் வரி வில்லும் வளை ஆழி கதை சங்கம்*** இவை அங்கை உடையான்*
நாளும் உறைகின்ற நகர்* நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே!

8.1.1 :
**சிலை இலங்கு பொன்னாழி*திண் படை தண்டு ஒண் சங்கம்** என்கின்றாளால்*
மலை இலங்கு தோள் நான்கே* மற்றவனுக்கு எற்றே காண் என்கின்றாளால்**
முலை இலங்கு பூம்பயலை* முன்போட அன்போடி இருக்கின்றாளால்*
கலை இலங்கு மொழியாளர்* கண்ணபுரத்து அம்மானைக் கண்டாள் கொலோ?

## மூன்றாம் திருவந்தாதி

36 :
கைய **கனலாழி* கார்க்கடல்வாய் வெண்சங்கம்***
**வெய்ய கதை சார்ங்கம் வெஞ்சுடர்வாள்** ** - செய்ய
படை பரவை பாழி* பனி நீருலகம்*
அடி அளந்த மாயர் அவர்க்கு.

## திருவாய்மொழி

3.10.1 :
சன்மம் பலபல செய்து வெளிப்பட்டுச்* **சங்கொடு சக்கரம் வில்***
ஒண்மை உடைய **உலக்கை ஒள்வாள்* தண்டு** கொண்டு புள்ளுணர்ந்து** உலகில்
வன்மை உடைய அரக்கர்* அசுரரை மாளப் படைபொருத*
நன்மை உடையவன் சீர் பரவப்பெற்ற* நான் ஓர் குறைவிலனே.

5.5.3 :
நின்றிடும் திசைக்கும்நையும் என்று* அன்னையரும் முனிதிர்*
குன்றமாடத் திருக்குறுங்குடி* நம்பியை நான் கண்டபின்**
**வென்றி வில்லும் தண்டும் வாளும்* சக்கரமும் சங்கமும்***
நின்று தோன்றிக் கண்ணுள் நீங்கா* நெஞ்சுள்ளும் நீங்காவே.

6.6.2 :
**சங்கு வில் வாள்தண்டு* சக்கரக்** கையற்கு*
செங்கனி வாய்ச்* செய்ய தாமரைக் கண்ணற்கு**
கொங்கலர் தண்ணந்துழாய்* முடியானுக்கு* என்
மங்கை இழந்தது* மாமை நிறமே.

7.2.6 :
மையல்செய்து என்னை மனம் கவர்ந்தானே! என்னும்* மா மாயனே! என்னும்*
செய்யவாய் மணியே! என்னும்* தண் புனல்சூழ் திருவரங்கத்துள்ளாய்! என்னும்**
**வெய்யவாள் தண்டு சங்குசக்கரம் வில்** ஏந்தும்* விண்ணோர் முதல்! என்னும்*
பைகொள் பாம்பணையாய்! இவள் திறத்தருளாய்* பாவியேன் செயற் பாலதுவே.

7.4.1. :
**ஆழி** எழச்* **சங்கும் வில்லும்** எழ* திசை
வாழி எழத்* **தண்டும் வாளும்** எழ**அண்டம்
மோழை எழ* முடி பாதம் எழ* அப்பன்
ஊழி எழ* உலகம் கொண்டவாறே.

8.8.1 :
கண்கள் சிவந்து பெரியவாய்* வாயும் சிவந்து கனிந்து* உள்ளே
வெண்பகல் இலகுசுடர்* இலகு விலகு மகர குண்டலத்தன்**
கொண்டல் வண்ணன் சுடர்முடியன்* நான்கு தோளன் **குனி சார்ங்கன்***
**ஒண் சங்கு கதை வாள் ஆழியான்*** ஒருவன் அடியேன் உள்ளானே.

8.10.9 :
தமர்கள் கூட்ட வல்வினையை*நாசஞ்செய்யும் சதிர்மூர்த்தி*
அமர்கொள் **ஆழி சங்கு வாள்*வில் தண்டாதி பல்படையன்****
குமரன் கோல ஐங்கணைவேள் தாதை*கோதில் அடியார்தம்*
தமர்கள் தமர்கள் தமர்களாம்*சதிரே வாய்க்க தமியேற்கே.

9.2.6 :
காய்சினப் பறவை ஊர்ந்து*பொன் மலையின் மீமிசைக் கார்முகில் போல்*
மாசின மாலி மாலிமான் என்று*அங்கு அவர்படக் கனன்று முன் நின்ற**
காய்சின வேந்தே! கதிர் முடியானே! * கலி வயல் திருப்புளிங்குடியாய்*
காய்சின **ஆழி சங்கு வாள் வில் தண்டேந்தி*** எம் இடர் கடிவானே!

## இராமானுச நூற்றந்தாதி

33 :
அடை ஆர் கமலத்து அலர்மகள் கேள்வன்* **கை ஆழி என்னும்**
**படையோடு நாந்தகமும் படர் தண்டும்*ஒண் சார்ங்கவில்லும்****
**புடை ஆர் புரிசங்கமும்** இந்தப் பூதலம் காப்பதற்கு என்று
இடையே*இராமானுச முனி ஆயின இந்நிலத்தே.

***ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்***